செ.வெ.எண் -18 நாள்: 10.07.2018

**அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களில் பிளாஸ்டிக் பயன்படுத்த தடை – மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவிப்பு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், சட்டப்பேரவையில் விதி 110ன்கீழ் தமிழகத்தில் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி முதல் பிளாஸ்டிக் பயன்படுத்த தடை விதித்து அறிவித்துள்ளார்கள். அதனை செயல்படுத்தும் வகையில் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் ஜீலை 15ம் தேதி முதல் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் விரிப்புகள், உணவு பொருட்களை எடுத்து செல்ல பயன்படுத்தும் பிளாஸ்டிக் கைப்பைகள், தட்டுகள் மற்றும் தண்ணீர் பாக்கெட்டுகள் ஆகியவற்றை முற்றிலும் பயன்படுத்த கூடாது எனவும், அனைத்து துறை அரசு அலுவலர்களும் கடைபிடிப்பதுடன் பொதுமக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும், இதற்கான அறிவிப்பை அனைத்து அலுவலகங்களிலும் மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் எனவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக துணிப்பை, காகிதப்பை, பாத்திரங்களை பயன்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**